8th March 1965]

(இ) 1964 ஆகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையில் அந்த மாவட்டத்தில் காலரா நோயுற்றவர் 411 பேர்கள், அவர்களில் இறந்தவர்கள் 127 பேர்.

(உ) ஆம்.

Women's Organisation (Pudukkottai)

*180 Q.—SRI A. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the representatives of various Women's Organisations at Pudukkottai presented any memorandum to the Chief Minister on 7th September 1964, regarding the work relating to the Women and Child Welfare in Pudukkottai; and

(b) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) புதுக்கோட்டையிலுள்ள பல்வேறு மாதர் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து மனு எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் புதுக்கோட்டை, வடக்குராஜ வீதியிலுள்ள மாதர் நல சங்கத்திலிடமிருந்து, 1964 அக்டோபர் 7 தேதியன்று கிடைத்த கோரிக்கைகளடங்கிய மனு, பரிசிலனையிலிருக்கிறது.

திரு. ஆ. துரையரசன்: அந்தக் கோரிக்கைகள் என்னென்ன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன. அது தீர்ந்த பிறகுதான் எது எது என்று கூற முடியும்.

திரு. ஆ. துரையரசன்: பரிசிலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். என்ன கோரிக்கைகள் என்று சபையில் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பல கோரிக்கைகள் இருக்கின்றன. எது எது என்று கூறுவதற்கு இயலாது. அவைகள் எல்லாம் பற்றி பரிசிலனை முடிந்த பிறகு தனியாகக் கேள்வி ஒன்றை அங்கத்தினர் அவர்கள் போட்டால் கூறப்படும்.

Prohibition of obscene exhibits

*181 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to prohibit exhibition of obscene posters and literature, in the State; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(ஆ) இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.